முன்றைய செயல்களை தான் இன்று மாணவர்கள் கல்வியாக கற்கிறார்கள். நம்முடைய செயல்களையும் அடுத்த தலைமுறை கல்வியாக கற்கும்படி சிறப்பாக வாழ்வோம்.

## ஓட்டு வாக்குரிமை

நம் உயிர், சொத்து, மனைவி, தாய் தந்தை, பிள்ளைகள், வீடு, சுவாசக்காற்று பாரத தாய், வறுமை, பஞ்சம், நோய் என அனைத்துமே அடங்கியது. இதை விற்றால் தெருவில் கூட நிற்க முடியாது. நாட்டையும், ஊரையும், ஆள நல்லவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

## உலகம் போற்றும்

உனது கவலைகளை நினைத்து
கண்ணீர் சிந்துவதை விட
உனது இலட்சியங்களை நினைத்து
இரத்தம் சிந்து
உலகம் உன்னை போற்றும்.

## பாரதம் காக்க

குமரியாக இருந்த நீ
தாய்மை அடைந்தால்
அம்மவாகி விடு பெண்ணே
(பாரதம் காக்க)
படித்துவிட்டால் பெண்ணே நீ
பரதேசம் கொள்ளாமல்
பண்புடைய பெண்ணாக மாறு
(பாரதம் காக்க)
ஆணவங்களுடன் திரியும் பெண்ணாகயில்லாமல்
அழியா சக்திபெறும்
ஆன்மீக பெண்ணாக மாறு
(பாரதம் காக்க)

பெண்களால் ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும். தாலி கட்டும் போது வந்த சந்தோசம் சாகும் வரை இருக்கனும். பிள்ளை பெற்றெடுக்கும் போது வந்த சந்தோசம் பெயர் சொல்லும் வரை இருக்கனும் பெண்ணே !!!

நாம் அனைவரும் பழைய காலங்களுக்கே உணவுக்கும், உடைக்கும், பழக்க வழக்கங்களுக்கும் மாற வேண்டும் மண்பாண்டங்களில் சமைத்தால் தான் மனித இனத்தையே காப்பாற்ற முடியும் நமக்கு நோய்வர முதற்காரணமே அலுமினிய பாத்திரங்கள்தான்.

**வாழ்க நலமுடன், வளமுடன்.**


**ப்ரௌசிங் (தேடல்), Print Out, Scanning, E-மெயில்**
**தட்டச்சு வேலைகள் என அனைத்தும் குறைந்த நிமிடத்தில் முடித்து கொடுக்கப்படும்.**



இப்படிக்கு :-
**M.ஆசைப்பொண்ணு,**
தேங்காய் குடோன், தர்ஷா நகர் பால்பண்ணை,
கஜானா கம்ப்யூட்டர்ஸ், சிறுகுடி. **செல். 97870 43124**



நீலா பிரிண்டர்ஸ், நத்தம்.

# சிறுகுடி கஜானா கம்ப்யூட்டர்ஸ்-ன் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

உலகில் உயர்ந்த பொருள் மனிதன் ! மனிதனுள் உயர்ந்தது, அவனது மனம். கல்வியோ, சாதியோ, பொருளாதாரமோ உயர்ந்தது அல்ல. இந்த மனம் ஐம்பூதங்கள் மாசு அடைவதால் நோய்வாய்ப்படுகிறது. உடலில் அங்கும் இங்குமாக திரியும் மனதை அனைத்து உடல் உறுப்புகளையும் காப்பாற்றினால்தான் உயிரையும், மனதையும் ஒருநிலைப்படுத்த முடியும்.

அன்னியர்களின் அடிமைவிலங்கை உடைத்தெரியும் போது அனைவரும் ஆரோக்கியமாக இருந்தார்கள். அவர்கள் விட்டுச்சென்ற தேசத்தை பல நாடுகளிடம் போய் அரசியல் தலைவர்கள் குறைந்த வட்டிக்கு அடகு வைத்துள்ளார்கள். அந்த நாடுகள் எப்போது நம்மை அடிமையாக்கும் என்பது விரைவில் தெரியும். நம் நாட்டில் இருக்கும் அரசியல் வாதிகளின் சொத்துக்களையும், பொருட்களையும் பறிமுதல் செய்தாலே அனைத்து நாடுகளிடமும் வாங்கிய கடனை திருப்பி அடைத்து விடலாம்.

நாம் இப்பவே பாதி கடனாளியாகவும், மீதி நோயாளியாகவும் உள்ளோம். அனைவரும் உழைக்காமலே சாப்பிட கற்றுக் கொண்டோம்.அதனால்தான் நோய்களிலிருந்து மீளவே முடியவில்லை.

**பெண்மை என்றும் தோற்பதில்லை. ஆண்கள் ஆரோக்கியத்துடன் இருந்தால்...**
ஆண்கள் தன் உடல் பலத்தை இழந்து கொண்டே வருகிறார்கள். புகையாலும், மதுவாலும், மங்கையாலும் பாக்கு வகைகளாலும் உபயோகிப்பதால் உடல் உறுப்புகளை அழிக்கிறார்கள். நம் உடலில் ஒரு சாதராண உறுப்பு பாதிக்கப்பட்டாலும் சாவு உறுதி.

## சுத்தமானால்

- ★ மனம் சுத்தமானால் பக்தி போற்றும்
- ★ மனம் பொதுவானல் மக்கள் போற்றும்
- ★ வீடு சுத்தமானல் செல்வம் போற்றும்
- ★ மனம் சுத்தமானல் அன்பு போற்றும்
- ★ ஊர் சுத்தமானால் ஆரோக்கியம் போற்றும்
- ★ நாமே சுத்தமானால் நன்மைகள் போற்றும்
- ★ நாடே சுத்தமானால் உலகமே போற்றும்.

## தாய்நாடு அழிகிறது

- ★ பெண் உழைக்காததனால் தாய்நாடு அழிகிறது.
- ★ பெண் பொய் சொல்வதினால் தாய்நாடு அழிகிறது.
- ★ பெண் விலைமாந்தர் ஆவதினால் தாய்நாடு அழிகிறது.
- ★ பெண் போதை பொருளாக திரிவதால் தாய்நாடு அழிகிறது.
- ★ பெண் ஆடம்பர பொருளாக திரிவதால் தாய்நாடு அழிகிறது.

ஒவ்வொரு நாட்டையும் தாய்நாடு என்று சொல்வதானல் பெண்கள்தான் நாட்டை காப்பாற்ற வேண்டும். இன்று டெஸ்ட் ட்யூப் (செயற்கை கரூவூட்டல்) மூலம் குழந்தை பெறுவது காலப்போக்கில் மண்களால் செய்த பொம்மைகள் போல் நம் மனித இனமே அழிந்து விடும் அபாயம் ஏற்படும்.

இன்று தண்ணியை சுத்திகரித்து குடிக்கிறோம் (மினரல் வாட்டர்) இரத்தத்தை சுத்திகரித்து ஏற்றி கொள்கிறோம் (டையாலசியஸ்) விரைவில் காற்றையும் சுத்திகரித்து மூக்கில் 1 மாதத்துக்கு 1 முறை மாட்டிக் கொண்டி திரிவோம்.

பாலிதீன் பைகளை எரிப்பதால் மெத்தைல், ஐசோசையனைட் நச்சுத்தன்மையான காற்று, காற்றில் கலப்பதால் ஆக்சிஜன் அளவை குறைக்கிறது. காற்றில் ஆக்ஸிஜன் அளவு 20.5 சதவீதமாகும். நாம் ஒவ்வொருவரும் சுவாசிக்க எடுத்துக் கொள்ளும் அளவு 6.9 சதவீதமாகும் உயிர் பிராண வாயுவின்அளவு குறைவதோடு மனிதனுக்கு பிற உயிர்களுக்கும் கேன்சர் கட்டிகளை பரிசாக தருகிறது.

நிலத்தின் பாலிதீன் பைகள் புதையுறுவதால் வேதிமண் ஆகி வறண்ட பாலைவனமாக மாறும். கடலில் கலக்கும் பாலிதீன் பைகளை உணவுப் பொருள் என விழுங்கிய உயிரிணங்கள் இறந்து கரை ஒதுங்குகின்றன. இதனால் உணவுப் பொருளும், கடல் உணவு, மாமிச வகைகளும் கிடைக்காமல் அழிவோம்.பாலீதின் புகையால், அமில மழை பெய்யும். இதனால் நோயாளும் பஞ்சத்தாலும் அடிபட்டு சாவோம். ஆகவே பாலிதீன் பைகளை தவிர்ப்பேம். நாட்டை காப்போம்.